1970 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

தென்காசி, ராஜபாளையம் பகுதிகளுக்கு பாசன வசதிகள்.

*278 வினா—திரு. மு. முத்தையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியிலிருந்து ராஜபாளையம் வரை ஓடிக்கொண்டிருக்கிற சிறு சிறு ஆறுகளை பரிசிலனை பண்ணுவதற்கு தனியாக அதிகாரிகளை நியமித்து பாசன வசதிக்கு பயன்படுத்தி விவசாயத்தை பெருக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இடமில்லை.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பொதிகை மலையில் பல சிறிய நதிகள் மிக வேகமாக ஓடுகின்றன. சில நதிகள் கேரள எல்லையில் ஓடியும் அங்கேயும் பயன் படாமல் இருக்கின்றன. அவற்றை அரசு பரிசிலனையில் எடுத்து, கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, அணைக்கட்டுகள் கட்டுவதன் மூலம் திருநெல்வேலியை வளப்படுத்த முயற்சி எடுக்கப்படுமா? அதைப் பரிசிலனை செய்ய ஒரு குழுவை புதிதாக நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அத்தகைய கருத்தும் அரசாங்கத்திலே ஆலோசனையில் இருக்கிறது. கேரள சர்க்காரோடு கலந்தாலோசித்து, தண்ணீர் கிடைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. அதில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் கருத்தும் இருக்கிறது.

Fuel for Departmental vehicles.

*279 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that instructions have been issued to the Revenue and other departments of the Government of Tamil Nadu that motor fuel required for the departmental vehicles should be purchased only from Indian Oil Corporation consumer pumps belonging to the Government departments; and

(b) if so, whether the departmental consumer pumps are supplying the required quantity of motor fuel even during night times for the departmental vehicles?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஆம்.